புலவர் கா. கோவிந்தன் : மாடுகளுக்கு லாடம் இல்லாவிட்டாலும், உடம்பில் புண் இருந்தாலும் அது குற்றம் என்று கருதி சொந்தக்காரர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் மனிதர்கள் காலில் செருப்பு கூட இல்லாமல் வண்டிகளை இழுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அமர்த்துகிறவர்களுக்கு தண்டனை கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுதுகூட விதிகள் இருக்கின்றன ; கை வண்டிகளில் இந்த பாரம், இவ்வளவு கனஅளவுக்கு மேல் எடுத்துச் செல்லக்கூடாது என்று விதிகள் இருக்கின்றன. ஆனால் அதைச் சுலபமாக அமுல் நடத்த முடிவதில்லை.

Educational Institutions (References to Castes)

* 31 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state what steps the Government have taken to delete all references to castes in the forms used in the educational institutions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Particulars relating to castes are required only in respect of pupils belonging to scheduled castes, scheduled tribes and backward classes who are eligible for educational concessions under the Madras Educational Rules.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஸ்டாட்டிஸ்டிகல் பர்பஸுக்கு என்று பிராமின், நான்-பிராமின் என்று வகைப்படுத்தி, அந்தந்த வகையில் யார் யார் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்க அரசாங்கத்திலிருந்து அல்லது டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அலுவலகத்திலிருந்து பாரங்கள் அனுப்பப்படுகின்றன. இது உண்மையிலேயே ஜாதியை தூண்டுவதாக ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அளித்த விடை கல்வி ஸ்தாபனங்களை பொறுத்தது. அவை சம்பந்தப்பட்ட வரை பிற்பட்ட வகுப்பினர், ஹரிஜனங்கள். இவர்களைப்பற்றி மட்டும்தான் கணக்கு எடுக்கிறார்கள். வேறு ஜாதியைப்பற்றி கோருவது இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று ஏற்பட்ட பிறகு ஆண்டுதோறும் வருமானத்தைக் குறித்து சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று கையாளும் முறை எதற்காக ? இதனால் மக்கள் அனாவசியமான தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.

Loans to goldsmiths

* 32 *Q.*—SRI RAMA ARANGANNAL (on behalf of Sri K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount asked for by the State Government and

18th January 1964]

the total amount of loans given by the Centre for the rehabilitation of goldsmiths during 1963 ?

THE HON. SRI R. VENKATARAMAN : A sum of Rs. 71,09,880 (Rs. 68,33,000 as loan and Rs. 2,76,880 as grant) has been asked for an assistance from the Government of India for the rehabilitation of goldsmiths. The Government of India have sanctioned a sum of Rs. 27,52,800 as loan during 1963.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்தத் தொகையில் இது வரையில் செலவானது எவ்வளவு என்னென்ன வகையில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது வரை ரூ. 11,27,570 செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2,000 ரூபாய் விதம் ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரீஸ் என்ற முறையில் லோன் ஆக ரூ. 4,32,000 சில்லரை அளிக்கப்பட்டு இருக்கிறது. ரூ. 1,000 விதம் சிறு வியாபாரம் முதலியவை செய்வதற்காக அளிக்கப்பட்டது ரூ. 6,95,220.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, கடன் தொகை அதிகமாகவும் மானியம் கொஞ்சமாகவும் இருக்கிறது. அப்படி இல்லாமல் மத்திய சர்க்கார் வழங்கக்கூடிய தொகையை பெரும்பாலும் மானியமாக வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் அளிப்பதில் விதிகள் இருக்கின்றன. இன்னின்ன வகையில் இவ்வளவு பணம் என்று எல்லா ராஜ்யங்களுக்கும் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த விதிகளின்படி மானியம் குறைவு, கடன் அதிகம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புனர் வாழ்வு பெற்ற பொற்கொல்லர்களின் எண்ணிக்கை, மாவட்டவாரியாக, எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்க முடியும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், இந்தக் கடனை பெறுவதிலே ஏதேனும் சிரமங்கள் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? கடன் பெறுபவர்களுக்கு ஜாமீன் கொடுப்பவர் சொத்துக்கு வில்லங்க சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று இருப்பதில் பல சிரமங்கள் இருப்பதால், சம்பந்தப்பட்ட தாசில்தாரோ பிளாக் அதிகாரியோ வில்லங்கம் சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட ரிஜிஸ்ட்ராராபீசில் ரெகார்டுகளைப் பார்த்து அதைத் தீர்மானிக்கலாம் என்று செய்தால் சிரமத்தைக் குறைக்க முடியும் என்று அரசாங்கம் உணருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காரிடத்திலிருந்து கடன் வாங்குவதில் என்ன சிரமம் இருக்கிறதோ அதைவிட அதிகமான சிரமம் இதில் இல்லை.

[18th January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அரசாங்கத்தினிடமிருந்து கடன் வாங்குவதில் சிரமம் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் ஒத்துக்கொள்வதை வரவேற்கிறேன். ஆனால் இந்தப் பொற்கொல்லர் களுக்குக் கொடுக்கப்படும் தொகையை பல தவணைகளில் கொடுக்கிறார்கள். ஒரே சமயத்தில் கொடுப்பதில்லை. ஒரு 1,000 ரூபாய் தொகை என்றால் 300, 200 என்று சிறு சிறு தொகைகளாகக் கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் ஒரு தொழிலை நடத்த முடிவதில்லை. ஆகவே கொடுக்கக்கூடிய தொகையை முழுவதும் ஆரம்பத்திலேயே கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு வித உதவிகள் கொடுக்கப்படுகின்றன. ஜாமீன் இல்லாமல் தொழில் செய்வதற்காக ரூபாய் 1,000 கொடுக்கப்படுகிறது. இது இரண்டு தவணைகளில் கொடுக்கப்படுகிறது. முதலிலேயே பூராவும் கொடுத்து விட்டால் அந்த தொகை தொழிலுக்கே பயன்படாமல் போனாலும் போகலாம். அடுத்ததாக ரூபாய் 2,000 ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரீஸ் என்ற முறையில் வழக்கமான விதிகளின்படி கொடுக்கப்படுகிறது. ஏதாவது தொழில் ஆரம்பிக்க பூர்வாங்க வேலைகள் பூர்த்தியாகி இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக தொகை கொடுக்கப்படுகிறது. முதலிலேயே பூராவையும் கொடுத்துவிட்டால் அவர்கள் வேறு கடன்களைத் தீர்த்துவிட்டு எந்த தொழிலுக்கும் உபயோகிக்காமல் போய்விடும். ஆனால் பெருவாரியான பொற்கொல்லர்கள் முழுப் பணமும் கொடுத்தால்தான் ஆரம்பிப்போம் என்று சொல்வதால் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

9.00 a.m. **திரு. இராம. அரங்கண்ணல் :** பொற்கொல்லர்களுடைய குழந்தைகளுக்குப் பூரண கல்விச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கான திட்டங்களை மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி கேட்டால், கல்விச் சலுகைகள் என்னென்ன என்பனவற்றைப் பார்த்துப் பதில் சொல்லலாம்.

திரு. செ. மாதவன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஆயிரம் ரூபாயை உடனடியாகச் செலவழித்துவிடக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், சில இடங்களில், ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக, சைக்கிள்களாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருக்கிறது. முதலில் இரண்டு சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆறு மாதம் கழித்து மேலும் இரண்டு சைகிள்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். சைக்கிள் கம்பெனி வைப்பதற்குக் குறைந்தபட்சம் நான்கு சைக்கிள்களாவது இருக்க வேண்டும். ஆகையால், சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்கும் இடத்திலாவது ஒரே சமயத்தில் ஆயிரம் ரூபாய் அளவுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விதமான புகார்கள் என்னிடத்தில் வரவில்லை. பொதுவாக, ஒரு தொழில் நடத்துவதற்கான உதவிகளைச் சரியான முறையில் கொடுக்க வேண்டு

மென்றுதான் விதிகள் ஏற்படுத்தியிருக்கிறேம். எனக்கு இதுவரை வந்த தகவல்படி ஆயிரம் ரூபாய்க்கு கடை வைத்து நடத்துவதற்கோ, சிறு தொழில் நடத்துவதற்கோ மனுப் போட்டதில் ரூ. 500 தான் முதலில் கொடுத்தார்கள், ரூ. 400 தான் கொடுத்தார்கள் என்பது. அதற்குக் குறைவாகக் கொடுத்ததாகப் புகார் வரவில்லை. நான் அவர்களுககு "முதலில் ரூ. 400-ஐ வாங்கிக் கொண்டு, உடனடியாக கடை ஏதாவதொன்றை அமைத்துக்கொண்டு, அவர்களிடமிருந்து ரசீது வாங்கிக் கொடுத்து, 'இவ்வளவு ரூபாய் செலவழித்து விட்டோம், மேற்கொண்டு தொகை வேண்டும் என்று கேட்டால், சர்க்கார் கொடுக்கும்" என்றுதான் சொன்னேன். ஆனால் "பூராப் பணமும் கொடுத்தால்தான் வேலை நடத்த முடியும்" என்று சொல்லிக்கொண்டு சிலர் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்வதில்கூட கொஞ்சம் தாமதம் ஆகிறது.

திரு. சி. பொன்னுசாமி : இந்த இனத்தில் ஒதுக்கப்பட்ட தொகையில் மீதம் இருப்பது எவ்வளவு? அதை இந்த நிதி ஆண்டுக்குள்ளாகத் துரிதமாகக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மீதம் ஒன்றும் கிடையாது. இன்னும் மேற்கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறேம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது தங்கக் கட்டுப்பாடு விதிகள் தளர்த்தப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால், பொற்கொல்லர்கள் பழைய நகையை அழித்துப் புதிய நகை செய்து கொடுக்கலாம் என்பதைத் துரிதப்படுத்துவதற்காக அதிகாரிகளை நியமித்து பொற்கொல்லர்களுக்கு வேகமாக அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றிய விதிகள் எல்லாம் இன்னும் மத்திய சர்க்காரிடமிருந்து எங்களுக்கு வரவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இலங்கையிலிருந்து வந்த டோபிகள், பார்பர்கள் முதலியவர்களுக்குக் கடன் கொடுத்த போது வில்லங்க சர்டிபிகேட் சம்பந்தமாக இருந்த கஷ்டங்களைத் தவிர்க்க அரசாங்கம் முன்பு ஒரு தடவை சலுகை காட்டி நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதுபோல், இதைப் பரிசீலனை செய்து, அத்தகைய சலுகை இதற்கும் கிடைக்க அரசாங்கம் உதவி செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான சலுகைகள் எல்லாம் இப்பொழுதும் கொடுக்கப்படுகிறது. ஆனால், எந்தத் துறையிலே அவர்கள் கடன் கோருகிறார்கள் என்பதைப் பொருத்து தான் அந்த உதவி இருக்கும். ஆயிரம் ரூபாய் கடனுக்கு அதிகமாக ஜாமீன் முதலில் கேட்க முடியாது. இரண்டாயிரம் ரூபாய்க் கடனுக்குத்தான் கேட்கிறேம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பழைய நகைகளை அழித்துவிட்டுப் புதிய நகைகளைச் செய்வதற்குப் பொற்கொல்லர்கள் அனுமதி வாங்க வேண்டும் என்று புதிதாக உத்தரவு

பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அனுமதி பெருதவர்களுக்கு இந்தக் கடன் வசதி இல்லை என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித் திருக்கிறதே, அதை மாற்ற அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொற்கொல்லர்கள் புதிய தொழில்கள் துவக்குவதற்குத் தங்களுக்கு வசதிகள் தரப்பட வேண்டும் என்று கோரவேண்டும் ; அல்லது, பழைய தொழில்களை நடத்துவதற்கு அனுமதி கோர வேண்டும், என்று மத்திய சர்க்காரே சொல்லியிருக்கிருர்கள். அதனுல், ஏதாவது ஒன் றுக்குத்தான் உதவி அளிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தங்கக் கட்டுப்பாட்டு விதிகளை அமல் நடத்தும் பொறுப்பு இராஜ்ய சர்க்காருக்கு விடப்பட் டிருக்கிறது. அதற்காகப் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட் டிருக்கிருர்களே, அவர்கள் இப்பொழுது என்ன வேலை செய் கிருர்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன வேலை செய்ய வேண்டும் என்று பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தங்கக் கட்டுப்பாடு சட்டம் வந்த தற்குப் பிறகு, நமது மாநிலத்தில் எத்தனை பொற்கொல் லர்கள் குடும்பங்கள் இருக்கின்றன, அவர்களுக்கு ஏற்பட் டுள்ள உண்மையான கஷ்டங்கள் என்ன, அவைகளை எந்த எந்த வகையில் நிவர்த்திக்கலாம் என்பதுபற்றி புள்ளிவிவரம் ஏதே னும் சேகரிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாக உதவி கோரி மனுச் செய்து கொண்டவர்கள் எல்லோரும் கஷ்டப்படு கிறவர்கள் என்று எடுத்துக் கொள்ளுகிருேம். மனு போட்ட வர்கள் எல்லோருக்கும் உதவி செய்வதற்கு ஏற்பாடு செய் திருக்கிருேம். ஆனுல், எத்தனை பேர் மனு போட்டிருக் கிருர்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவ ரங்கள் கொடுக்கலாம்.

திரு. வை. சங்கரன் : பொற்கொல்லர்கள் கிராம அதிகாரிகளிட மிருந்து சர்டிபிகேட் பெறுவதில் மிகவும் கஷ்டமும் கால தாம தமும் ஏற்படுகிறது, மதுரையைப் பொறுத்தவரையில், தனித்தனி யாக சர்டிபிகேட் வேண்டுமென்று வற்புறுத்தாமல், மொத்தமாக லிஸ்டு எடுத்துக் கொடுப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய் யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனித்தனியாகக் கேட்கப் படுகிற கடனுக்குத் தனித் தனியாகத்தான் கொடுக்க முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய அரசாங்கத்திடமிருந்து விதிகள் வராததற்குக் காரணம் என்ன ? தங்கக் கட்டுப்பாடு சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது என்பதாவது உண்மையா ? அதிலும் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா ?

[18th January 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கக் கட்டுப்பாடு சட்டம் தளர்த்தப்படடிருக்கிறது என்றுதான் உத்தரவு வந்திருக்கிறது. ஆனால், இதில் எனன என்ன செய்வது என்பதெல்லாம பற்றி நாங்கள் அப்ளிகேஷன் தயார் பண்ணி வைத்துக் கொண்டிருக்கிறோம். உத்தரவு வந்தவுடனே செய்து விடுவோம்.

Rickshaws and cycle rickshaws

* 33 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleaed to state—

(a) the total number of rickshaws and cycle rickshaws permitted to be put on the road in Madras City up to 30th June 1963;

(b) the basis on which such permits are issued; and

(c) whether the Government will issue larger number of permits to cycle rickshaws and rickshaws to be run in the City in view of the increase in the population?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The total number of hand-drawn rickshaws and cycle-rickshaws registered in Madras City as on 30—6—1963 is 3,616 and 1,003 respectively.

(b) Only such of those cycle rickshaws and hand-drawn rickshaws which have been registered in the previous year are registered this year, provided those vehicles are found roadworthy. No fresh registration is made.

(c) As the ultimate object is to eliminate these slow moving vehicles, the question of increasing the existing number of vehicles does not arise.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இப்பொழுதிருக்கும் வசதிகளில் இந்த ரிக்ஷாக்கள்தான் 'சிப்பஸ்ட் ட்ரான்ஸ்போர்ட்' டாக இருக்கிறது. இந்த வசதி பொது மக்களுக்கு மிகவும் தேவைப் படுவதாக இருக்கிறது. நகரத்தின் எல்லை மேலும் மேலும் விஸ்தரிக்கப்படுகிற காரணத்தால், மீண்டும் இதுபற்றிப் பரிசிலனை செய்ய கனம் அமைச்சருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை மறுபடியும் பரிசிலனை செய்வதாக உத்தேசம் இல்லை. மனிதன் மனிதனை வைத்து இழுத்துக் கொண்டு போவதே அவமானம். இதைக் குறைத்துவிடுவதுதான் நல்லது.

திரு. பி. கே மூக்கையா தேவர் : மனிதன் இழுக்கும் ரிக்ஷா வேண்டாம் என்று வைத்துக்கொண்டாலும் சைக்கிள் ரிக்ஷா போன்றவைகள் மிகவும் 'சிப்' பாக இருக்கிறது என்று பத்திரிக்கைகளில் வந்த செய்தியை கனம் அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள். சென்னை ராஜ்ய மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சைக்கிள் ரிக்ஷா மூலமாக ஆபத்து அதிகம் ஆகிறது, ரோடு ஆக்ஸிடென்ட்களும் அதிகமாகின்றன, என்ற செய்திகளும் கணக்குகளும் வந்திருக்